# ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
# தமிழ், கலை, அறிவியல் கல்லூரி
# மயிலம் - 604 304

## நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)

## டெங்கு விழிப்புணர்வு முகாம்

| | |
|---|---|
| *நாள்* | *10.07.2019* |
| *பொருண்மை* | *டெங்கு விழிப்புணர்வு* |
| *தலைமை* | *மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞான பாலய சுவாமிகள் இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்* |
| *சிறப்பு விருந்தினர்* | *மருத்துவர் தேன்மொழி, வட்டார மருத்துவ அலுவலர், மயிலம்* |
| *பங்கேற்றோர் எண்ணிக்கை* | *200* |
| *குறிப்புரை* | *மயிலம் அரசு ஆரம்பச் சுகாதார மருத்துவ அலுவலர் மருத்துவர் தேன்மொழி உள்ளிட்ட மருத்துவக் குழு சார்பாக டெங்கு கொசு எவ்வாறு உருவாகிறது என்பது குறித்தும், டெங்கு கொசு உருவாகாமல் தடுப்பதற்குரிய வழிமுறைகளையும் செயல்வழி செய்து காட்டி மாணவர்களுக்க விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் 200 நபர்கள் மற்றும் நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.* |

*புகைப்படம்*



## செய்தித்தாளில் வெளிவந்த பகுதி

ப்பம் அருகே

# முகர் கொலை; 7 பேர் சிக்கினர்

## ் குவிப்பு

ய
் வெட்டப்
ராஜ் மற்றும்
ாக்கப்பட்ட
இருவரும்ரத்த
உயிருக்கு
ள். இதுபற்றி
கோட்டக்குப்
ன்ஸ்பெக்டர்
-இன்ஸ்பெக்
றும் போலீ
வந்து இருவ
னகசெட்டிக்
பிம்ஸ் ஆஸ்
த்தனர்.
பலனின்றி
ரிதாபமாக
ர். முகேஷ்
ைசை பெற்று
லை செய்யப்
த்ராஜிக்கு
தழந்தையும்

### ினர்

தொடர்
பம்போலீ
வு செய்து
சாரணை
ஜ் நண்பர்
ஜனாவின்
கும் பிறந்த
னர் வைப்
க கடந்த
ா ஏற்பட்
ட்ட முன்
அபிசுக்கு
ல்பட்ட
லை செய்
ந்தது.
் ஈடுபட்
காட்டக்

குப்பம் போலீஸ் இன்ஸ்பெக்டர் சரவணன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு உள்ளது. இந்த தனிப்படையினர் தீவிர விசாரணை நடத்தினர். ஜனா (29) மற்றும் அவரது கூட்டாளிகள் மாத்தூர் முந்திரிதோப்பில் பதுங்கி இருப்பதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் விரைந்து சென்று முந்திரி தோப்பில் பதுங்கியிருந்த ஜனா மற்றும் அவரது கூட்டாளிகள் கவுதம் (29), பரத் (24), சரண் (24), கதிரவன் (27), மோராஜ் (22), கபிலன் (45) ஆகியோரை சுற்றிவளைத்து பிடித்தனர். அவர்களை போலீஸ் நிலையத்தில் வைத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

### வீடுகளுக்கு தீ வைப்பு

இதற்கிடையில் அனிச்சங்குப்பத்தை சேர்ந்த கலைஞர் என்பவரின் துண்டுதலின்பேரில் வினோத்ராஜ் கொலை செய்யப்பட்டதாக அவரது தந்தை கிருஷ்ணமூர்த்தி போலீசில் புகார் தெரிவித்தார். இதனால் ஆத்திரமடைந்த வினோத்ராஜின் ஆதரவாளர்கள் சுனாமி குடியிருப்பில் உள்ள கலைஞர் வீட்டுக்குள் புகுந்து அங்கிருந்த பொருட்களை சூறையாடினர். மேலும் அங்குள்ள 2 வீடுகளுக்கு தீ வைத்தனர்.

அனிச்சங்குப்பம், கீழ்புத்துப்பட்டு பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருவதால் கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு முகிலன், போலீஸ் சூப்பிரண்டு அஜய் தங்கம் தலைமையில் 100-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டு உள்ளனர்.

# ணாடியை உடைத்த 2 பேர் கைது

விழுப்புரம், ஜூலை.13–

ானாம்பட்டு வழியாக ஆனாங்கூருக்கு கடந்த
ரியார் மினி பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது.
் அருகில் சென்றபோது யாரோ மர்ம நபர்கள்,
ிட்டு தப்பிச்சென்று விட்டனர். இதில் பஸ்சின்
களும் உடைந்து நொறுங்கி சேதமடைந்தது.
பிரகாஷ், விழுப்புரம் தாலுகா போலீஸ் நிலையத்
ாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து
ந்நிலையில் பஸ் கண்ணாடியை உடைத்ததாக
ன் (வயது 28), செல்வராஜ் (25) ஆகிய இருவரை
னர்.

வி.ஆர்.எஸ். பொறியியல் கல்லூரியில்

# மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



அரசூர், ஜூலை.13–

திருவெண்ணெய்நல்லூர் அருகே அரசூரில் உள்ள வி.ஆர்.எஸ். பொறியியல் கல்லூரியில் மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்வள பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திருவெண்ணெய்நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலர் ராம்குமார் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாத்துரை, கல்லூரி முதல்வர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியின்போது, மழைநீர் சேகரிப்பு மற்றும் நீர்வள பாதுகாப்பு குறித்து மாணவ–மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குணமணி, டேவிட், கல்லூரியின் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைத்தலைவர் சாதிக்பாஷா உள்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் அனைவரும் மழைநீர் சேகரிப்பு குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மயிலம் தமிழ் கலைக்கல்லூரியில்

# டெங்கு விழிப்புணர்வு முகாம்



மயிலம், ஜூலை.13–

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டுநலப்பணித்திட்டம் மற்றும் மயிலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் உலக மக்கள் தொகை தினவிழா மற்றும் டெங்கு விழிப்புணர்வு முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதற்கு மயிலம் பொம்மபுரம் ஆதினம் 20-ம் பட்டம் சிவஞான பாலய சுவாமிகள் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். மயிலம் வட்டார மருத்துவ அலுவலர் தேன்மொழி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் வாசு, சுகாதார ஆய்வாளர் துரைசாமி, வட்டார சுகாதார புள்ளியிலாளர் ராஜேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டு உலக மக்கள் தொகை தினம் மற்றும் டெங்கு விழிப்புணர்வு குறித்து மாணவ-மாணவிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார்கள். அதைத்தொடர்ந்து உலக மக்கள் தொகை தினம் குறித்து மாணவ-மாணவிகளுக்கு கட்டுரை, பேச்சு போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் பரிசு வழங்கப்பட்டன. இதில் சமுதாய செவிலியர் மாலதி, பகுதி சுகாதார செவிலியர் சிவகாமி மற்றும் பேராசிரியர்கள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தமிழ்த்துறை உதவி பேராசிரியர் சிவசுப்பிரமணி நன்றி கூறினார்.